# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT, NAMAKKAL.

C.C. No.257/2024

P.W.9

| | | |
|---|---|---|
| பெயர் | : | தனசேகர் |
| தந்தை பெயர் | : | முத்துசாமி |
| கிராமம் | : | மடத்தான்பள்ளி, பரமத்திவேலூர், நாமக்கல் மாவட்டம் |
| வட்டம் | : | |
| தொழில் | : | மருத்துவர் |
| வயது | : | 39 |

Solemnly affirmed by Tr.G.Rajakarthik, Bench Clerk in accordance with the provisions of Oaths Act, 1969 on the day of 10.02.2025.

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. அவரது வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்,

முதல் விசாரணை :–

நான் தற்போது திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.08.2023 அன்று பணியில் இருந்த போது காலை 11.15 மணியளவில் சுமார் 50 வயது மதிக்கதக்க பெயர், விலாசம் தெரியாது ஆண் நபரை விவேகானந்தா ஆம்புலன்சு மூலம் அழைத்து வந்தனர். அவருக்கு உஞ்சனை அருகில் அன்று காலை 10.30 மணியளவில் சாலை விபத்து ஏற்பட்டதாக கூறப்பட்டது. அந்த நபரை பரிசோதித்த போது அவர் சுயநினைவின்றி காணப்பட்டார். 1) அவருக்கு தலையில் 7x7 செ.மீ அளவிலான ரத்தக்கட்டு இடது பக்கவாட்டு பகுதியில் காணப்பட்டது. மேலும் அதே இடத்தில் 4x1 செ.மீ அளவில் கிழிந்த காயம் இருந்தது. 2) 1X1 செ.மீ அளவில் ஒரு சிராய்ப்பு காயம் வலது கையில் காணப்பட்டது. 3) மூக்கில் இருந்து ரத்தம் வழிந்து இருந்தது. அவருக்கு சி.டி ஸ்கேன் எடுப்பதற்கும், நரம்பு மருத்துவரின் கருத்துரைக்காகவும் அவரை சேலம் அரசு மருத்துவமனைக்கு பரிந்துரைத்தேன். மேற்சொன்ன நபரை நான் அனுமதித்ததற்கான விபத்து பதிவேடு

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM020020172024-orderno-3.pdf

www.ecourtsindia.com

**அ.த.சா.ஆ.3/அ.சா.9** ஆகும். வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

(எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என பிரதிநிதித்துவம் செய்யப்பட்டு, அது பதிவு செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை இல்லை என முடிக்கப்படுகிறது)

(மறுவிசாரணை – இல்லை)

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக் காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை / கையெழுத்து இட்டார்.

VIJAYA KUMAR S

Digitally signed by VIJAYA KUMAR S
Date: 2025.02.10 16:50:15 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
நாமக்கல்

www.ecourtsindia.com

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM020020172024-orderno-3.pdf

www.ecourtsindia.com



DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT, NAMAKKAL.
C.C. No.257/2024
P.W.10

| | | |
|---|---|---|
| பெயர் | : | கோமதி |
| கணவர் பெயர் | : | பாஸ்கர் |
| கிராமம் | : | திருச்செங்கோடு |
| வட்டம் | : | |
| தொழில் | : | அரசு மருத்துவர் |
| வயது | : | 49 |

Solemnly affirmed by Tr.G.Rajakarthik, Bench Clerk in accordance with the provisions of Oaths Act, 1969 on the day of 10.02.2025.

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. அவரது வழக்கறிஞர் முன்னிலையாகியுள்ளார்,

முதல் விசாரணை :-

நான் தற்போது திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.08.2021ம் தேதி நான் பணியில் இருந்த போது மாலை 4.10 மணிக்கு தாமோதரன் (46) என்ற ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்யுமாறு திருச்செங்கோடு ஊரக காவல் ஆய்வாளர் அவர்களின் குற்ற எண்.443/2021, சட்டபிரிவுகள் 279, 337, 304(A) இதச வழக்கு சம்பந்தப்பட்ட வேண்டுகோள் கடிதத்தினை பெற்று அன்று மாலை 4.15 மணிக்கு உடல் கூறாய்வு தொடங்கினேன். ஆண் சடலம் கண் மற்றும் வாய் மூடி காணப்பட்டது. உடல் விறைப்பு தன்மையுடன் காணப்பட்டது. வெளிப்புற காயங்கள் 1) தலையில் இடது பக்கவாட்டில் 5 செ.மீ அளவில் கிழிந்த காயம் தையல் போடப்பட்டிருந்தது. 2) இடது பக்க நெற்றியில் 3x2 செ.மீ அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. 3) இடது முழங்கையில் 7x4 செ.மீ அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. 4) இடது தோள்பட்டையில் 6x5செ.மீ அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. 5 ) இடது கையில் 3x2 செ,மீ அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. 6) வலது முழுங்கையில் 3x2 செ,மீ அளவில் சிராய்ப்பு காயம் காணப்பட்டது. உட்புற காயங்கள் 1) தலையின் வலது மற்றும் இடது பக்கவாட்டு எலும்பு முறிந்து காணப்பட்டது. 2) தலையின் கீழ்ப்பகுதியில் எலும்பு முறிவு காணப்பட்டது. 3)

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM020020172024-orderno-3.pdf

www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com www.ecourtsindia.com

தலையின் முன்பகுதியில் சுமார் 100 மி.லி அளவிலான ரத்தம் உறைந்து காணப்பட்டது. 4) இடது பக்க விலா எலும்புகள் 2 முதல் 8வரை முறிந்து காணப்பட்டது. 5) இடது பக்க காலர் எலும்பு முறிந்திருந்தது. 6) நெஞ்சு பகுதியில் சுமார் 150 மி.லி அளவிலான ரத்தம் உறைந்து காணப்பட்டது. 7) உள்ளுறுப்புகள் அனைத்தும் வெளிறி காணப்பட்டது. இறந்த நபர் அவருக்கு ஏற்பட்ட அதிர்ச்சி மற்றும் உடலின் முக்கிய உறுப்புகளில் ஏற்பட்ட காயங்களினாலும் அவர் பிரேத பரிசோதனைக்கு முன்பு 6 லிருந்து 8 மணி நேரத்திற்குள்ளாக இறந்திருக்கக்கூடும் என கருத்து வழங்கி நான் கொடுத்த பிரேத பரிசோதனை சான்று **அ.த.சா.ஆ.4/அ.சா.10** ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

(எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என பிரதிநிதித்துவம் செய்யப்பட்டு, அது பதிவு செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை இல்லை என முடிக்கப்படுகிறது)

(மறுவிசாரணை – இல்லை)

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக் காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை / கையெழுத்து இட்டார்.

VIJAYA KUMAR S

Digitally signed by VIJAYA KUMAR S
Date: 2025.02.10 16:50:22 +0530

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
நாமக்கல்

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNNM020020172024-orderno-3.pdf